# களனி பல்கலைக்கழகம் - இலங்கை

**திருத்தம் செய்தல் — பணிப்பாளர்/பௌதிகக் கல்வி மற்றும் பிரதான மார்ஷல் பதவிகள்**

2025 ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பதவிகளுக்கான விளம்பரத்திற்கு அமைய, அங்கு காட்டப்பட்டுள்ள உயர்ந்தபட்ச வயதெல்லை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் / உயர் கல்வி நிறுவனங்களின் / அரச திணைக்களங்களின் / கூட்டுத்தாபனங்களின் மற்றும் நியதிச் சபைகளின் ஊழியர்களுக்குப் பொருந்தாது என இத்தால் அறியத்தருகின்றோம்.

அதற்கமைய அரச துறையில் சேவையில் ஈடுபடும் உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2026 ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**நிர்வாக ஊழியர் குழாம்:**

- பௌதிகக் கல்விப் பணிப்பாளர் (U-Ex 2 (II) - திரட்டுச்சம்பளம் ரூபாய் 147,524/-)
- பிரதான ஒழுக்க பாதுகாப்பு அதிகாரி (U-Ex 2 (II) - திரட்டுச்சம்பளம் ரூபாய் 147,524/-)

முன்னைய விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சகல தகைமைகள், நிபந்தனைகள் மற்றும் விதிகள் மாற்றமடையாது காணப்படும். மேற்படி பதவிகளுக்கு இதுவரையில் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லையென்பதுடன், அவர்களின் விண்ணப்பப்படிவங்கள் திருத்தப்பட்ட வயது எல்லைக்கு உட்பட்டு கவனத்தில் கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் விதம்:**

உரிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் பதவிகள் தொடர்பான விபரங்களை களனி பல்கலைக்கழகத்தின் வலைத்தளத்தினால் services.kln.ac.lk தரவிறக்கம் செய்ய முடியும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்வது நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரம் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் ஊழியர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை குறித்த நிறுவனத் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும், அபேட்சகர்களை குறும்பட்டியலிடும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உரியது.

இந்தத் தேவைப்பாடுகளுக்கு அமைவாகாத, தாமதித்து கிடைக்கப் பெறும் அல்லது பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் 2026 ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**களனி.**
**2026.03.26**